**வாராந்தப்பாடசாலை செயற்பாட்டுப்பத்திரம்**

**கல்விப் பொதுத் தராதர உயர்தரம்**

**பாடம்:- தமிழ் தரம்:- 13**

01. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

ஓர் இலக்கியம் படைப்பாளி தன்னைச் சுற்றி வாழும் சக மனிதர்களையும் நடவடிக்கைகளையும் அவ்வப்போது நம் சமூபத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்களையம் மாறுதல்களையும் அவற்றுக்கான அக-புறக் காரணிகளையும் உற்று நோக்கும்போது எழும் ஒரு வகை மன உந்துதல் காரணமாக ஒரு கலைப்படைப்பை படைக்க ஆரம்பிக்கின்றான். ஆதன் வழியே அவன் இந்தச் சமூகத்திடம் சில விசயங்களை அல்லது சேதிகளை தெரிவிக்க ஆசைப்படுகின்றான். இப்படித்தான் நம் சமூகத்தில் ஒரு படைப்பாளி உருவாகின்றான். இவ்வாறு கலைப்படைப்பைப் படைக்க மிகப்பெரிய படிப்பாளியாகவோ பண்டிதனாகவோ இருக்கவேண்டும் என்ற கட்டாயம் ஒன்றும் கிடையாது. அது மட்டுமல்ல கலை, இலக்கியக் கோட்பாடுகள், உலகத் தத்துவங்கள் போன்றவைகளைப் படித்து தெரிந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இவனது படைப்பு, கருத்து, கண்ணோட்டம், சமூக நிகழ்வுகளைப் பற்றிய மதிப்பீடு போன்றவை குறுகிய கண்ணோட்டத்துடன் அல்லது கோணல் மாணலான சித்தரிப்பாக இவனது இரசனைக்கும் விருப்பத்திறகும் இசைய திசைமாறிச் செல்ல வாய்ப்புண்டு. இம்மாதிரிக் கூட்டத்தில் அத்தவறான போக்கினைக் கண்டித்து, அவனை விமர்சித்து, அப்படைப்பைச் செறிவுபடுத்த வேண்டியது அவசியமாகின்றது.

02. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

**அ. பெண் விடுதலை** பற்றி பாரதியார் கொண்ட கருத்தினை விளக்குக.

**ஆ. தியாகம்** என்ற சிறுகதையில் கதிரேசன் செட்டியாரின் குணாம்சங்கள் பற்றி விளக்குக
.

**இ. "ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது**" என்ற நாவலில் தாமோதரம் என்ற பாத்திரத்தினூடாக ஆசிரியர் வெளிப்படுத்த விளைந்த முற்போக்குச் சிந்தனைகளை விளக்குக.

ஈ. **ஈழநாட்டுக் குறம்** என்ற கவிதையினூடாக ஈழ நாட்டின் சிறப்பும் பெருமையும் வெளிப்படுமாற்றினை விளக்குக.

**உ. கோயில் திருப்பதிகத்தில்** ஆசிரியர் இறைவன் மீது கொண்டுள்ள பக்தி வெளிப்படும் விதத்தினை விளக்குக.